# உத்திரகிரியை முன்தயாரிப்பு

இறைவன் திருவடி சேர்ந்தவரின் ஆத்ம சாந்திக்காக செய்யப் படும் உத்திரகிரியை கார்யம், சம்பிரதாயப்படி, தர்மத்தின் அடிப்படையில் மிகவும் தரமாக அமைய வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தில் திட்டமிடல் ஒருங்கிணைப்பது மற்றும் செயல்படுவது குறித்து விரிவாக தரப்பட்டுள்ளது.

நடப்பு

உத்திரகிரியை முந்திய நாள் மாலையில் தொடங்கி மறுநாள் அதிகாலை வரை செய்யப்படும் பூஜை செய்யப்படும் பூஜையாகும்.

இது நீத்தாரை நமது வீட்டில் இருப்பதாக பாவித்து அவருக்கு செய்யும் பணிவிடை.

வாய்க்கு சுவையாக அவருக்கு பிடித்தமான உணவுகளை படைப்பது.

காதுக்கு இனிமையான தேவாரம், நாலாயர திவ்ய பிரபந்தம் மற்றும் பஜனை பாடல்களை இசையுடன் பாடுவது.

சுவாசிக்க வாசனையாக ஊதுவத்தி ஏற்றுவது, தூபம் வீடு முழவதும் போடவும்.

கண்களுக்காக கற்புரம் தீபம் ஏற்றுதல்.

அவரின் படம் அல்லது சிலையை தொட்டு அங்கம் புழுதி பட வணங்குதல்.

நடப்பு அன்று இரவு முழுவதும் தேவாரம், திவ்ய பிரபந்தம், பட்டினத்தார் பாடல்களை பாட பஜனை கோஷ்டி ஏற்பாடு அல்லது ஆடியோ சிடி ஒலித்தல்

ஆத்மா சாந்தி அடைய அவரின் வாழ்கையின் பாதையை அனைவரும் கேட்கும் வண்ணம் உரைத்தல், அவரை மனதில் நினைதல். சிலைக்கு அபிஷேகம் செய்தல்.

மாயிலை

கொத்தாக வேண்டும், நன்கு கழுவி சுத்தம் செய்யவும்

கோ பூஜை

வெல்லம் ¼ கிலோ, வாழைப்பழம் 6, கோதுமை தவிடு 2 கிலோ, அரிசி 1/2 Kg, உருவிய அகத்திக்கீரை இவையனைத்தையும் முந்திய நாளே பெரிய வாளி யில் நீர் ஊற்றி ஊற வைக்கவும்.

கர்த்தா தன் கையினால் பசுவிற்கு மேற்படி ஊற வைத்ததை உத்திரகிரியை அன்றைய தினம் காலையில் பசுவிற்க்கு தானம் அளிப்பது நல்லது.

கார்யம் அன்று அதிகாலையில் வீட்டிற்கு பசு கன்று அழைத்து வரவேண்டும்.

வீட்டிலிருந்து புறப்பாடு

கர்த்தா கொள்ளி வைத்த துணியை கட்டி கொண்டு குளித்து ஈர உடலுடன் குளத்திற்கு உறவினர்களுடன் புறப்பட வேண்டும்.

புறப்படும் முன் குளத்திற்கு எடுத்து செல்லும் அனைத்து பொருட்களையும் நடுவீட்டில் வைத்து தீபாராதனை செய்யுவும்.

<u>கர்த்தா கையில் கொண்டு செல்ல வேண்டியது</u>

| | | |
|---|---|---|
| வெற்றிலை | 5 | *நல்லெண்ணெய் 100 மில்லி |
| பாக்கு | 5 | * பால் : 100 மில்லி |
| எலுமிச்சை | 1 | *தயிர் : 100 மில்லி |
| சீயக்காய் பொட்டலம் | 1 | *கோமியம் : 50 மில்லி |
| வாழைப்பழம் | 2 | *மூடியுடன் கூடிய புட்டியில் |

நீக்கப்பட்ட தாலி கயிறு, மெட்டி, வளையல் (ஒரு சிலர்)
பங்காளிகள் கையில் ஏந்தி செல்ல வேண்டியது : முளை பாலிகை

பூஜை பொருட்கள்

பட்டியலில் உள்ள பொருட்கள் அனைத்தையும் முந்திய நாளே வாங்கவும்.

பட்டியலையும் வாங்கிய பொருட்களையும் ஒப்பிட்டு சரிப்பார்க்கவும்.

முக்கியமானவைகள்

தேங்காய் உடைக்க வெட்டு கத்தி, தேன்புட்டி, பன்னிர்புட்டி திறக்க பேனா கத்தி, ப்ளேடு :– சவரம் செய்ய மற்றும் பூஜை பொருட்கள் பிரிக்க.

மண்டபம்

- முன் கூட்டியே பணம் கட்டி ரசீது வாங்கி பதிவு செய்யவும்
- மண்டபம் சாவி பொறுப்பாளரை அறியவும்
- இடத்தை முந்திய நாளே சுத்தம் செய்யவும்
- தேவைப்படின் ஷாமியானா ஏற்பாடு செய்யவும்.
- மழைக்காலமாக இருப்பின் தரை மற்றும் கூரை பிளாஸ்டிக்கால் மூட வேண்டும்.

ஜமக்காளம்

- வருகை தருபவர்கள் உட்காருவதற்கு ஏற்ப ஜமக்காளம் 2 தேவை
- முதியவர், ஊனமுற்றவர் வசதிக்காக நாற்காலி 4 தேவை.

குடிநீர்

- நிகழ்ச்சியின் பொழுது வருகை தருபவர்களின் தாகத்தை தணிக்க தூய்மையான குடிநீர் தேவை.
- நீர் ஊற்றி தர பிளாஸ்டிக் கப் தேவை.
- வசதியிருப்பின் மோர், தேநீர், குளிர்பானம் ஏற்பாடு செய்யலாம்

மரமனை

- புரோகிதர் மற்றும் கர்த்தா அமரும் வகையில் 2 மர மனைகள் தேவை

காசி / இராமேஸ்வரம் புணித பயணம்

வசதி உள்ளவர்கள் தலைதெவசம் வரும் முன்னர் காசி , இராமேஸ்வரம் சென்று பிண்டதர்பணம் தருதல் நன்று . மே லும் விபரம் புரோகிதர் வசம் அறியவும்

குளியல் (200 லிட்டர்)

நிகழ்ச்சியிலே வருகை தரும் பங்காளிகள் எண்ணிக்கைக்கு தகுந்தார்போல் 3 முறை குளிக்க போதுமான அளவு தண்ணீர் ஏற்பாடு செய்யவும்.

- டீக்கடைகளுக்கு நீர் ஊற்றுபவரை தொடர்பு கொள்ளலாம்.

பஞ்சகவ்யம்

| | | | |
|---|---|---|---|
| பசும் பால் | 100 ml ( மூடியுடன் கூடிய புட்டியில் ) | கோமியம் | 50 ml ( மூடியுடன் கூடிய புட்டியில் ) |
| பசும் தயிர் | 100 ml ( மூடியுடன் கூடிய புட்டியில் ) | சானம் | சிறிதளவு ( பிளாஸ்டிக் பையில் ) |
| நெய் | 50 ml ( மூடியுடன் கூடிய புட்டியில் ) | விரட்டி | 16 எண்ணிக்கை ( நன்கு காய்ந்தது ) |

பொங்கல் ( குளத்தில் )

- விரட்டி (நன்கு காய்ந்தது) – 16 எண்ணிக்கை , விரட்டி கிடைக்காத நிலையில் செங்கல் 6, சுள்ளி 10 kg தேவை
- மண்ணெண்ணெய் 100 ml ( மூடியுடன் கூடிய புட்டியில்)

கோத்திரம்

- தங்களின் கோத்திரம் அறியவும்.
- மூன்று தலை முறை பெயரை எழுதிக்கொண்டு வரவும்.

சிலை கல்

நீத்தார் மற்றும் தலை முறையினரின் புனிதமான உடலாக பாவித்து பூஜை செய்யப்படும் புனித கல்.

- அளவு 2 அங்குலம் கருங்கல் – 3 எண்ணிக்கை
- முக்கோண கூம்பு போன்று இருக்க வேண்டும். புதியதாக கால் படாத இடத்தில் இருந்து கொண்டு வரவும்
- முந்திய நாளே சிலைக்கல்லை நன்கு சுத்தம் செய்து நடுவீட்டில் வைத்து கொண்டு வரவும்.
- தார் சாலையில் உள்ள கால் அடிபட்ட கல்லை கொண்டு வர வேண்டாம்.
- தலை குளித்து கல் கொண்டு வரவும்.
- மிகவும் புனித தன்மையுடன் சிலை கல்லை கையாளவும்.



வைஷ்ணவம்

வைஷ்ணவர்கள் தங்களின் நாமம் இடும் முறை வடகலையா? தென்கலையா? என்று அறியவும்.

மின்தடை

நடப்பு அன்று மின்தடை ஏற்பட்டால் சமாளிக்க பெட்ராமாஸ் லைட், டார்ச்லைட் தேவைப்படும்.

துணிகள்

- கர்த்தா வீட்டில் இருந்து கொள்ளி வைத்த துணியுடன் புறப்படவும், மேலும் ஒரு மாற்று துணி தேவை.
- பங்காளிகள் அனைவரும் வேஷ்டி கட்டி கொள்ள வேண்டும் மாற்று வேஷ்டி தேவை.
- கர்த்தாவிற்கு தலை துவட்ட துண்டு மற்றும் உபரி ஜட்டி தேவை.

ஏகாதிர்ஷ்டம் தானம் ( தெலுங்கர்) தட்சனை : ரூபாய் 200

ஏகாதிர்ஷ்டம் தானம் செய்ய, புதிய மனை, விசிறி, குடை, பஞ்சபாத்திரம், செம்பு, 8 முழம் வேஷ்டி, துண்டு, பாத அணி, தட்சணை

சுமங்கலி (ஒரு சுமங்கலிக்கு தட்சனை : ரூபாய் 200 )

சுமங்கலி கார்யத்தில் ஒரு சுமங்கலிக்கு பட்டியலில் உள்ள படி தானம் செய்ய வேண்டும்.

தூய்மை

- பழைய செய்தி தாள்கள் 10 தேவை 5
- நிகழ்ச்சியின் பொழுது ஏற்படும் மக்கும், மக்காத குப்பைகளை அகற்றிட பெரிய அளவு உறுதியான பிளாஸ்டிக் பை 2 தேவை.
- நிகழ்ச்சி முடிந்த பின் இடத்தை சுத்தம் செய்து அடுத்து வருபவர்கள் பயன்படுத்தும் வகையில் ஒப்படைக்க உறவினர் ஒருவரை நியமிக்கவும்.

பாடல்

கர்த்தா சிலை பூஜையின் பொழுது தெரிந்த தேவாரம் / நாலாயிர திவ்ய பிரபந்தம் பாடலை பாடினால் மாண்டவரின் ஆத்மாவிற்கு இதமாக இருக்கும். முயற்சி செய்யுங்கள் இந்த விஷயத்தில் புரோகிதர் உதவி கிடைக்கும்.

சில்லரை காசுகள் ( 1 ரூபாய் காசு 48 )

புரோகிதருக்கு பூஜையின் பொழுது தேவைப்படும் சில்லரை காசு மட்டும் பட்டியலில் உள்ளது.

பண்டாரம், மேளம் தேவைக்கு தாங்களே நேரில் பணம் தரவும்

லாந்தர் விளக்கு

- சிமிழியுடன் கூடிய சிறிய லாந்தர் விளக்கு.
- குளத்திலிருந்து வீடு திரும்பும் வரை ஒளிர் விட வேண்டும்.
- சரிவர வேலை செய்கிறதா என முன்னதாக பரிசோதிக்கவும்.

## பிரவேசம் (கர்த்தா வீட்டில் கலசத்துடன் பிவேசித்தல்)

- கர்த்தா வரும் முன்னர் வீட்டை கழுவி சுத்தம் செய்யவும்.
- வாசற்படிக்கு மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு, மாவிலை தோரணம் கட்டவும்.
- வாசலில் 8 இதழ் தாமரை கோலம் போடவும்.
- வீட்டின் வாசலின் எதிரில் காமாட்சி தீபம் ஏற்றவும் ( கர்த்தா தீபத்தை பார்த்தப்படி நுழைய)
- வாசலில் பங்காளிகள் கால் அலம்ப வாளியில் நீர் மற்றும் சொம்பு

சேவை தரம்

புரோகிதரின் சேவையில் ஏற்படும் குறைகளை நிறைகளை புரோகிதரிடம் மனம் திறந்து தெரிவிக்கவும்
அனைத்து விதமான விமர்சனங்கள் வரவேற்கபடுகிறது

ஒத்துழைப்பு

புனிதமான இந்த நிகழ்ச்சியில் முழ அளவு ஈடுபாடுடன் புரோகிதர் ஒத்துழைப்பு தருவார். தங்களின் முழ ஒத்துழைப்புடன் நிகழ்ச்சியினை நல்ல முறையில் இறைவனின் அருளால் படைப்போம்.

நிகழ்ச்சி நேரம் மற்றும் மேலாண்மை

பங்காளி எண்ணிக்கை, சூழ்நிலை, தங்களின் வருகை அடிப்படையில் சுமார் **3** மணி நேரம் ஆகும். நிகழ்ச்சி துவங்கிய பின்னர் ராகுகாலம், எமகண்டம் ஆகியவை காரணம் காட்டி விரைவாக முடிக்க புரோகிதரை வற்புறுத்த வேண்டாம்.

நிகழ்ச்சி திட்டமிட்டபடி நடக்க முன்னேற்பாடுகள் சரியாக இருந்தால் போதும்.

புரோகிதர் வருகை : மிக சரியாக குறித்தபடி புரோகிதர் வருகை தருவார்

முதல் மரியாதை

தாய்மாமன் தான் தலை கட்டுதலில் முதல் மரியாதைக்கு உரியவர். மாற்றம் இருப்பின் முன்னதாக பெரியவர்கள் வசம் பேசி முடிவு செய்ய வேண்டும்.

முளை பாலிகை

**6** மணி நேரம் நவதான்யத்தை நீரில் ஊறவைக்கவும். புது மண் சட்டியில் பாதி அளவில் மணல், சிறிது பசுஞ்சாணம், நீர், ஆகியவற்றை விட்டு நன்கு கலந்து அதன் மேல் நவதான்யத்தை தெளித்து தினமும் காலையில், மாலையில் நீர் விடவும். பாலாபிஷேகம் அன்று அல்லது **8** ஆம் துக்கம் அன்று முளை பாலிகை விடலாம்.

முடிதிருத்துதல்

- கர்த்தா குளக்கரையில் பூஜை துவங்கும் முன்னர் சவரம் செய்யவும். அவரை தொடர்ந்து பங்காளிகள் சவரம் செய்யவும்.
- பிளேடு பாக்கெட் பட்டியலில் உள்ளது தவறாமல் வாங்கவும்.
- மறைந்தவரை காட்டிலும் வயதில் மூத்தவர்கள் மறுநாள் சவரம் செய்துக் கொள்ள வேண்டும்.
- கட்டாயம் வீட்டிலிருந்து மறக்காமல் டெட்டால் கொண்டுவரவும்

மேளம் (குறிப்பிட்ட பிரிவினர்களுக்கு மட்டும்)

- வீட்டில் இருந்து குளக்கரைக்கு புறப்படும் பொழுதும் மீண்டும் வீட்டில் நுழையும் பொழுதும் மேளம் தேவை.
- மேளக்காரரிடம் வீட்டில் இருந்து புறப்படும் நேரத்தை தெரிவிக்கவும்.
- குளத்தில் இருந்து வீடு திரும்பும் நேரம் மாறுதலுக்கு உட்பட்டது என்பதை தெரிவிக்கவும்.

பண்டாரம் (தேவைப்படின்) பண்ணால் (இசை,பாட்டு) மறைந்த ஆத்மாவை திருப்திபடுத்துபவர் என்று பொருள்.

- கட்டாயம் தேவாரம் பாட தெரிந்திருக்க வேண்டும்.
- புரோகிதர் சொல்லும் நேரத்தில் ( சிலை பூஜை பொழுது ) மறுப்பு தெரிவிக்காமல் தேவாரம் பாட வேண்டும்
- முழு ஒத்துழைப்பு தருபவராக இருக்க வேண்டும்.
- பூஜையின் பொழுது வேஷ்டி கட்டி இருக்க வேண்டும்.
- பண்டாரம் இல்லையென்றால் பூஜையில் எவ்வித தடங்கலும் இல்லை.

போக்குவரத்து ( ஆட்டோ, வேன் – முன் நாள் மதியம் முதல் மறுநாள் மதியம் வரை )

- குளத்திற்கு பொருட்களை கொண்டு செல்ல ஆட்டோ, வேன்,
- உறவினர்களை குளத்திற்கு அழைத்துச்செல்லவும் வீடு திரும்பவும்
- பொருட்கள் வாங்கி வர, ஓட்டலில் இருந்து உணவு கொண்டு வர முழுநாள் வாடகை நன்று

லாந்தர் விளக்கு

- குளத்திலிருந்து வீடு திரும்பும் பொழுது தேவை
- சிமிழியுடன் கூடிய சிறிய லாந்தர் விளக்கு.
- குளத்திலிருந்து வீடு திரும்பும் வரை ஒளிர் விட வேண்டும்.
- சரிவர வேலை செய்கிறதா என முன்னதாக பரிசோதிக்கவும்.

திதி விபரம்

மறைந்தவரின் திதி மற்றும் இறந்த நேரம் குறித்து புரோகிதரிடம் வசதியான நாளில் சந்தித்து தலை திதி வரை பிரதி மாதம் " மாத திதி " செய்ய வேண்டிய விபரத்தை அறியவும்.

ஒவ்வொரு வருடமும் திதி (தெவசம்) வரும் தேதியை முன்னதாக தங்களுக்கு புரோகிதர் நினைவூட்டுவார்

தர்மம்

நிகழ்ச்சி அன்று காலையில் நல்ல நிலையில் மீதம் உள்ள உணவு பொருட்களை அனாதை இல்லங்களுக்கு குறித்த நேரத்தில் தரலாம்.

உத்திரகிரியை, ''மாததிதி'' நாட்களில் அன்னதானம் ஏற்பாடு செய்யலாம். ( தர்மம் தங்களின் வசதிக்குட்பட்டதாக இருக்க வேண்டும் )

உதாரணம் : குட் லைப் சென்டர், 12 லோகனாதன் தெரு, மேற்கு தாம்பரம். தொலைபேசி எண்கள் : 2226 4151, 2226 4152

புறப்பாடு

கர்த்தா கையில் ஏந்தி செல்ல வேண்டியதை தவிர மற்ற அனைத்து பொருட்களையும் முன்கூட்டியே குளத்திற்கு அனுப்பி வைத்து இடத்தை சுத்தம் செய்து, குளிக்க நீர் நிரப்பவும்

புறப்படும் முன் பட்டியல் துணைக்கொண்டு பொருட்களை சரிபார்க்கவும்

படம்

கார்யம் முடிந்த பின்னர் நீத்தாரின் படத்தை பூஜை அறையில் அல்லது வீட்டில் தெற்கில் வைக்கவும் (வடக்கு நோக்கிய முகம்). மாதா, பிதா, குரு, தெய்வம் எனவே முதல் வணக்கத்திற்கு உரியவர்கள் பெற்றோர்

வே ண் டு கோ ள்

தலைதிதி முன்னதாக கல்வி ஆண்டு துவங்கும் காலத்தில் ஏழை மாணவர் சீருடை தானம் தொடர்பாக புரோகிதர் தங்களை நாடி வருவார். சீருடை தேவைப்படும் ஏழை மாணவருக்கு தாங்களே நேரிடையாக சீருடை வாங்கித்தந்து தருமம் செய்யவும்.

## தனிப்பட்ட தேவையான பொருட்கள்

### நடப்பு

தேவாரம் CD (நடப்பு)
திவ்யபிரபந்தம் CD (நடப்பு)
பட்டினத்தார் பாடல் CD (நடப்பு)

### குளக்கரைக்கு

கலச செம்பு 1
தாம்பாளம் 5
பேசின் 2
கை துடைக்க துண்டு
வெட்டுக்கத்தி
நவதான்ய முளைபாலி
குடை
பெரிய தவலை 2
பக்கெட் 2
கைஆள சொம்பு 2
குளிக்க நீர்

சூரைத் தேங்காய் 1
தலைதுவட்ட துணி 2
மாற்று வேஷ்டி ஜட்டி
லாந்தர் விளக்கு
மரமணைகள் 2
மாவிலை கொத்து
குடிநீர்
டீ / காபி / மோர்

டம்ளர்
பிளேடு + டெட்டால்
கத்திரிக்கோல்
பழைய செய்தி தாள்கள்

ஜமக்காளம்
நாற்காலி (வயதானவர்களுக்கு மட்டும்)
சிறிய கப் 2

குப்பை போட பை
துடைப்பம்

மண்ணெண்ணை 100ml
விரட்டி 16 அல்லது விறகு சுள்ளி 10 Kg

தென்னம் ஓலை, பாளை
இளநீர் 2

இனிப்பு பலகாரம் ¼ Kg

புரோகிதர் பூஜை பொருள்

10 ரூபாய் தாள் 5
சில்லரை காசுகள் 48

# பூஜைப்பொருட்கள்

## பூஜைப்பொருட்கள்

| | |
|---|---|
| விபூதி | pkt 1 |
| நாம சூர்ணம் | |
| மஞ்சள் தூள் | 50gm |
| மஞ்சள் குங்குமம் | 25gm |
| சந்தன வில்லை | 10gm |
| ஊதுபத்தி | pkt 1 |
| கற்பூரம் | 50gm |
| அரசன் சுள்ளி | 1 கட்டு |
| வெற்றிலை | 100 |
| பாக்கு | 50gm |
| கொட்டைபாக்கு | 9 |
| வெல்லம் | 50gm |
| எள் | 50gm |
| நெய் | 50gm |
| சீயக்காய்தூள் | pkt 1 |
| நவதான்யம் | 50gm |
| நெல்லிப்பருப்பு, பச்சல கிச்சிலி | |
| கதம்பத்தூள் | 10gm |
| நெல்பொரி | pkt 1 |
| தீப்பெட்டி | 2 |
| பன்னீர்புட்டி | 50ml |
| தேன்புட்டி | 10ml |
| 10ம் நம்பர் நூல்கண்டு | 2 |
| பூ நூல் | 3 |
| ப்ளேடு | pkt 1 |
| பாக்கு தொன்னை | 12 |
| தர்ப்பை புல் | 1கட்டு |
| அவல் , கடலை | 100gm |
| நல்லெண்ணை | 100ml pkt |
| பச்சரிசி மாவு | 100gm |
| உளுத்தம் மாவு | 100gm |

## பூ வகையறா

அருகம்புல், துளசி, வில்வம்

பூச்சரம் 10முழம்

## பசுவிற்கு தானம்

| | |
|---|---|
| கோதுமை தவிடு | 2Kg |
| கடலை புண்ணாக்கு | 2Kg |
| வெல்லம் | ½ Kg |
| உறுவிய அகத்திக்கீரை | (1 கட்டு) |

முன் நாள் இரவு ஊறவைத்து கார்யம் அன்று உதயத்தில் பசுவிற்கு தரவும்

## பசுவின் பொருட்கள்

பால் (மூடியுடன் கூடிய புட்டியில்) 100ml

தயிர் (மூடியுடன் கூடிய புட்டியில்) 100ml

கோமயம் (மூடியுடன் கூடிய புட்டியில்)

சாணம், விரட்டி 16

## தானம்

| | |
|---|---|
| காய்கறிகள் | 9 வகை |
| அகத்திக்கீரை | 1 கட்டு |
| பச்சரிசி | : 5 Kg |
| கடுகு, சீரகம் – தலா | : 100gm |
| மிளகு, வெந்தியம்–தலா | : 100gm |
| தூள்உப்பு | pkt 1 |
| புளி | : 1/4 Kg |
| மிளகாய் | : 1/4 Kg |
| பருப்பு 4 வகை தலா | : ½ Kg |

## இதர பொருட்கள்

| | |
|---|---|
| மட்டைதேங்காய் | 1 |
| உரித்த தேங்காய் | 3 |
| இளநீர் | 2 |
| எலுமிச்சை | 12 |
| வாழைப்பழம் | 12 |
| வாழைஇலை | 16 |
| இனிப்பு பலகாரம் | ¼ Kg |

## துணி வகையறா

கலசதுண்டு 3

அய்யர் : 4முழம் கதர் வேஷ்டி, துண்டு

சட்டைதுணி

## பானை வகையறா

| | |
|---|---|
| சாணக்கு பெரியது | 3 |
| அகல் | 2 |
| குடுவை | 2 |
| கால்படி பொங்கல் பல்லா | 1 |

## சுமங்கலி

(இதை தனியாக வாங்கவும்)

| | |
|---|---|
| மஞ்சள்தூள் | 25gm |
| மீனாட்சி குங்குமம் | 10gm |
| சந்தனம் வில்லை | 10gm |
| மஞ்சள் கொம்பு | 25gm |
| மஞ்சள் கிழங்கு | 25gm |
| வெற்றிலை | 25 |
| பாக்கு | 10gm |
| கரிமணி, மெட்டி | |
| தாலி பொட்டு, சரடு | |
| காது ஓலை | |
| வளையல், சீப்பு | |
| கண்ணாடி, மைபரணி | |
| குங்கும பரணி | |
| புடவை, ரவிக்கை | 1 |
| முறம் | 2 |
| பூச்சரம் | 10 முழம் |
| தேங்காய் | 1 |
| பச்சரிசி | 1 கிலோ |
| காய்கறிகள் | 5வகை |
| பச்சைபருப்பு | ¼ Kg |
| உளுத்தம் பருப்பு | ¼ Kg |
| சுமங்கலி தட்சணை : | |

---

சுமங்கலி காரியத்தில் குளக்கரையில் வருகை தரும் பெண்(சுமங்கலி) களுக்கு தாம்பூலம் பையில் இருக்க வேண்டியவை (தங்கள் வசதிக்குட்பட்டது)

| | | |
|---|---|---|
| பூ ஒரு முழம் | மஞ்சள்தூள் | தேங்காய் |
| வாழைப்பழம் | குங்குமம் | தாலிகயிறு |
| வெற்றிலை 2 | சீப்பு | மஞ்சள் கிழங்கு 1 |
| பாக்கு 2 | கண்ணாடி | வளையல் 2 |

---

*Updated on 03 Nov 2006*

**Balu. Saravana Sarma, Prohithar & Jothishar,**
Phone 91 44 2226 1742, 91 98403 69677, prohithar@yahoo.com



**www.prohithar.com**